# அண்ணா புகழ் என்றென்றும் மலை போல் நிலைத்து நிற்கும்!





**1948** ஆம் ஆண்டு ஈரோட்டில் திராவிடர் கழக சிறப்பு மாநாடு நடைபெற்றது. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களும், பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் கே.வி.அழகரிசாமி அவர்களும், இறுதியாக கலந்துகொண்ட குறிப்பிடத்தக்க மாநாடுதான் இந்த ஈரோடு திராவிடர் கழக மாநாடாகும். அந்த மாநாட்டு ஊர்வலத்தில் குதிரைகள் பூட்டப்பெற்ற அலங்காரத்தேரில் அறிஞர் அண்ணாவை அமரவைத்து தேரின் முன்னே ஈடு இணையற்ற தலைவரும் சீர்திருத்த செம்மலுமான தந்தை பெரியார் அவர்கள் நடந்தே சென்றார். தனக்குக் கீழே பணியாற்றுகின்ற கட்சித் தொண்டர் ஒருவரை தேரில் அமரவைத்து ஒருமாபெரும் தலைவன் தேரின் முன்னே நடந்து சென்ற வரலாறு உலகின் எங்கேயும் நாம் கேட்டதுண்டா? இப்படி நடந்து சென்றவர் பெரியார் என்பதும் இத்தகைய மரியாதை செய்யப்பெற்ற தளபதி பேரறிஞர் அண்ணா என்பதும் சாதாரண நிகழ்வல்ல. இதில் பொதிந்துள்ள பெரியாரின் பெருந்தன்மையையும், அண்ணாவின் பெருமையும் உணர்த்தும் ஆழ்ந்த படிப்பினையை இன்றைய தலைமுறையினர் ஊன்றிக் கற்க வேண்டும்.

### தந்தை பெரியார்!

இதுமட்டுமல்ல – இந்த மாநாட்டில் பேசிய தமிழினத்தின் மான மீட்பர் தந்தை பெரியார் அவர்கள்.

“நான் பொதுத் தொண்டில் ஈடுபட்டு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. எனக்கோ வயது எழுபதுக்கு மேலாகின்றது. எத்தனை நாட்களுக்குத்தான் இனியும் என்னால் உழைக்க முடியும்? நமது இயக்கத்தில் பலர் இருக்கிறார்கள். கட்சியின் நலன் நாடி உழைக்க! ஏன். இன்றைய மாநாட்டின் தலைவர் அண்ணாதுரை ஒருவர் போதும் நமது கழகத்தை நடத்திச் செல்ல! அவர் படித்தவர்; பகுத்தறிவுவாதி: நல்ல எழுத்தாளர்; பேச்சாளர்; அத்துடன் உங்கள் அபிமானத்தைப் பூரணமாகப் பெற்ற வாலிபர்! அவர் ஒருவரே போதும் நம்மை நடத்திச் செல்ல! என்னைப் பொறுத்தவரையில் நான் கூறுகிறேன். எனக்கு வயதாகிவிட்டது. வயதாகிய தந்தை தன் பொறுப்பைத் தன்னுடைய மகனிடம் ஒப்படைத்து விடுவதுதான் நியாயம்; உலக நடைமுறையுங்கூட!

ஆகவே நான் இன்று எனது பெட்டிச் சாவியை அண்ணாவிடம் உங்கள் முன்னிலையில் கொடுத்து விடுகிறேன். எனவே தந்தை தன் கடமையைச் செய்துவிட்டான். இனி தனயன் தன் கடமை– பொறுப்புணர்ச்சி ஆகியவற்றை உணர்ந்து நடக்க வேண்டும்” – எனக் குறிப்பிட்டார் பெரியார்.

### முத்தமிழறிஞர் கலைஞர்!

“பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் அண்ணன் அவர்களின் திருவுருவம் பொறித்த ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டதோடு ஒளி மிகுந்த கருத்துக்களை வழங்கியுள்ள மத்திய நிதி அமைச்சரும் என்னுடைய நீண்ட நாளைய நண்பருமான நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி அவர்கள் மிக அருமையாக உரையாற்றி இருக்கின்றார்கள். நாணயத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்றால். அண்ணாவின் நாணயம் அரசியலிலே எப்படிப்பட்டது என்பதை இப்பொழுது வெளியிட்டிருக்கின்றார்கள் என்றுதான் அதற்குப் பொருள்.

அண்ணாவின் நாணயம் எத்தகையது என்பதற்கு அவருடைய அரசியல் வரலாற்றில் எத்தனையோ கட்டங்கள் உண்டு. எத்தனையோ நிகழ்வுகள் உண்டு. அவர் அரசியலிலே கடைப்பிடித்த நாணயத்திற்கு உதாரணம் சொல்லவேண்டுமேயானால் எங்கள் அருமை தந்தை பெரியார் அவர்களோடு சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு, விலக வேண்டிய சூழ்நிலை உருவான போது, சிலர் அண்ணாவிற்கு அரிய யோசனை என்று கருதிக்கொண்டு சில யோசனைகளைச் சொன்னதுண்டு. அது என்ன யோசனை என்றால். “நீங்கள் விலகினால் போதாது, பெரியாருடைய தலைமையிலே உள்ள திராவிடர் கழகத்தையே கைப்பற்ற வேண்டும்” என்று சொன்னார்கள். அப்போது அண்ணா அவர்கள் காட்டிய பெருந்தன்மைதான் ஈடு இணையற்ற அரசியல் நாணயம் ஆகும்.

“அண்ணா சொன்னார்கள். “நீங்கள் சொல்வதைக் கேட்டால் திராவிடர் கழகத்தாரும். நாம் தொடங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சண்டை போட்டுக் கொண்டு வாழ்நாள் முழுவதும் போராட்டக் களத்திலே இருக்கத்தான் நேரிடும். இப்போது இரண்டு கழகங்களும் தனித்தனியே பணியாற்றும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக, திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கு”மென்று சொன்னார்.

அதுவும், அவர் தீர்க்கதரிசிதான் என்பதற்கு இன்றைக்கு திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டும். இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கிறது என்பதை நீங்கள் நிதர்சனமாகக் காணுகிறீர்கள். எனவேதான் அண்ணா அவர்கள் அன்றைக்குக் காட்டிய அரசியல் நாணயம், வெற்றிகரமாக பலித்து இன்றைக்கு திராவிடர் கழகமும். திராவிட முன்னேற்றக் கழகமும் பணியாற்றுகின்ற நிலைமையை தமிழகத்திலே காண முடிகின்றது.”



**சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தமிழக அரசு சார்பில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா**

**முதல்வர் கலைஞர்**
**15-9-2009**

### இனமானப் பேராசிரியர்!

அண்ணா அவர்களின் குடும்பம் எளிய நிலையில் இருந்தது. காஞ்சியில் ஒரு ஓட்டு வில்லை வீட்டில் அவர்கள் வாழ்ந்தனர். திண்ணையில் ஒரு அரிக்கன் விளக்கு வைத்துத்தான் அண்ணா படிக்க வேண்டும். ஓரிரு விருந்தினர் வந்தாலும் அவர்களும் அண்ணாவுடன் தையல் இலை போட்டு அதிலேதான் உணவருந்த வேண்டும். அவரைச் சூழ்ந்திருந்த குடும்பங்களும் குறைந்த வருமானத்தில் எளிய நிலையில் வாழ்ந்தவர்கள். அண்ணாவை வளர்த்த சிற்றன்னையார் ஒரு சிறு மாத ஊதியம் பெற, அண்ணா ஒரு அரசு வேலையில் சேரவேண்டும் என்றுதான் வலியுறுத்தினார். அக்கால நிலையில் அண்ணா ஒரு எழுத்தராக அரசு வேலையில் சேர்ந்திருந்தாலும், பின்னர் படிப்படியாக பதவி உயர்வு பெற்று உயர்ந்த ஊதியம் பெற்றிருக்கலாம். ஆனால், அண்ணாவின் அறிவாற்றலுக்கு ஏற்ற வேலை எதுவும் அமையவில்லை என்பது உண்மை எனினும் அண்ணாவின் உள்ளம் தனது குடும்பம் போலவும், அதைவிடவும் மிகுதியான வறுமையில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்காகப் பாடுபடாமல், தன் குடும்பத்திற்காகவே அரசுப் பணி ஏற்று வாழ்வதை விரும்ப வில்லை. சிற்றன்னையிடமும், குடும்பத்தாரிடமும் பேரன்பு கொண்டவராயினும், மக்களைப் பற்றிய அவரது கவலை. பொதுவாழ்வில் ஈடுபடவே அவரைத் தூண்டியது!’

**பேராசிரியர்**
**அண்ணா நூற்றாண்டு நிறைவு மலர்**
**2009**

### முரசொலிமாறன்!

“இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழன் என்ற பெயரைப்பெற்ற அண்ணா -திராவிட கலாச்சாரத்தின் தூதுவராக இருக்கிற அண்ணா – இன்னும் சொல்லப்போனால் நம்முடைய தனித்தன்மையை எந்தக் காலத்திலும் இழக்கக் கூடாது என்று கூறிய அண்ணா அதே நேரத்தில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி வேண்டும் என்று குரல் கொடுத்தவர் அண்ணா. அப்படிப்பட்ட அண்ணாதான் நம்முடைய தலைவர். அவருடைய தம்பிகள்தான் நாம். ஆனால் இன்றைய தினம் அண்ணாவைப் பார்க்காதவர்கள். அண்ணா பெயரைக் கேட்காதவர்கள் எல்லாம் அண்ணா பெயரைக் கொச்சைப்படுத்தியும்கூட அண்ணா அழியாமல் மலை போல நிமிர்ந்து நிற்கிறார். அதுதான் அவரின் தனி இயல்பு. இது மட்டுந்தான் அண்ணா காட்சியகமா என்று கேட்டால், இதுமட்டும் அல்ல என்றுதான் சொல்வேன். அண்ணாவின் அருங்காட்சியகம்தான் கலைஞர். அண்ணாவின் அருங்காட்சியகம்தான் பேராசிரியர். அண்ணாவின் அருங்காட்சியகம்தான் தி.மு. கழகம், இந்த நினைவகங்கள் எப்போதும் காலத்தால் அழியாமல் இருக்கும்.

**முரசொலி மாறன்**
**அண்ணா அருங்காட்சியகத் திறப்பு விழா**
**15.9.1990**

# சட்டமன்றத்தில் தமிழ்நாடு தீர்மானம் முன்மொழிந்து அண்ணா உரை!


சட்டமன்றத் தலைவர் அவர்களே…

இந்த மன்றத்தின் எல்லா கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டுத் தீர்மானமாக நிறைவேற்றப்பட இருக்கின்ற தமிழ்நாடு என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி, இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும், நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும். இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக்கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர, நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி இன்றைய தினம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். என்றாலும், இதிலே எல்லா கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள்கூட இந்தத் தீர்மானத்தை ஆதரித்தார்களே தவிர வேறில்லை. அதிலே சில ஆலோசனைகள் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லியிருப்பது, எதிர்க் கட்சியில் இருப்பவர்களுடைய கடமை என்ற வகையில், ஆலோசனைகள் சொல்ல வேண்டும் என்ற முறையிலேயே தவிர, எதிர்க்கிறார்கள் என்று இல்லை. ஆகையினால், இந்தத் தீர்மானம் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இந்தியப் பேரரசுக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கிறது.

இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது, இதைப் பற்றி அவர்கள் சொல்லும்போது தமிழக சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது என்பதனை முன்கூட்டியே என் னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள பல தலைவர்கள் அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக்கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில் பத்து நாட்களுக்கு முன் நாடாளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றிப் பேச வேண்டிய வாய்ப்புக் கிடைத்த நேரத்தில், அங்குள்ள உள்துறை அமைச்சர் சவான் அவர்கள் ‘மெட்றாஸ் ஸ்டேட்’ என்று பழக்கப் பட்டவர் மிகுந்த அக்கறையோடும். மிகுந்த கவனத்தோடும் ‘தமிழ்நாடு என்றுதான் பேசியிருக்கிறார். ஆக, இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றைய தினம் இந்த அவையிலே நாம் பெற்றிருக்கிறோம்.

மதிப்புமிக்க ம.பொ.சி. அவர்கள், இதிலே மிகுந்த மன எழுச்சி பெற்றது இயற்கையானதாகும். அவர்கள் பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை யோடு பாடுபட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதிலே ‘திராவிட’ என்பதை இணைத்துக்கொண்டிருப்பதாலே தமிழ்நாடு என்பதிலே அக்கறை



இல்லாமல் போய்விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில், ‘தமிழ்நாடு இன்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும் மற்றவர்கள் கொண்டு வருகிறார் களே என்பதனால் முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும் இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டிருந்தாலும் இன்றைய தினம் அவர்களும் தமிழ்நாடு என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்து பெருமைப்படுகிறார்கள். ஆகையால், இந்தத் தீர்மானம் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையில் நிறைவேற்றப்பட இருக்கிறது என்று கருதுகிறேன்.

இது இன்று கழகத்துக்கு வெற்றியல்ல; தமிழரசுக் கழகத்துக்கு வெற்றியல்ல; மற்ற கட்சிகளுக்கு வெற்றியல்ல இது தமிழுக்கு வெற்றி: தமிழருக்கு வெற்றி; தமிழ் வரலாற்றுக்கு வெற்றி; தமிழ்நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்குகொள்ள வேண்டும். தமிழ்நாடு என்ற பெயர் இருந்தால், வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்பது மட்டு மல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்பு இருந்த வெங்கட்ராமன் அவர்கள், ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டிவரும்; அதனாலே சிக்கல்கள் நாடுகளுக்கெல்லாம் விளையும் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் வெளிநாடுகளெல்லாம் போய் வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களே தவிர, உண்மையாக சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதைக் கவனப்படுத்துவதில்லை.

மதிப்புக்குரிய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னபடி ‘கோல்டு கோஸ்ட்’ என்பது ‘கானா’ ஆகிவிட்டது. அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டுவிடவில்லை. தமிழ்நாடு தனி நாடாகியிருந்த பெயரை விடவில்லை; இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்துகொண்டிருந்த பெயரை இடுவதால், இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டும் என்பதை ஒரு கடமை உணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நண்பர் ஆதிமூலம் அவர்கள். “தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்துக் காகத் தன்னைத்தானே தியாகம் செய்துகொண்ட சங்கரலிங்கனார் அவர் களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்”என்று குறிப்பிட்டார்கள். அதையும் அத்தனை பேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றைய தினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும் அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கு எல்லாம், நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க காரியமாகும். நம்முடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் நெடுங்காலத்துக்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்கின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள்.

என்னுடைய பாட்டனார் காலத்திலேதான் நம்முடைய நாட்டுக்குத் தமிழ்நாடு என்ற பெயர் இடப்பட்டது. எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த எனது பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார்” என்று கருத்திருமன் பேரப் பிள்ளைகளும் எங்களுடைய பேரப்பிள்ளைகளும் எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளை யெல்லாம் அவர்கள் எண்ணிப்பார்ப்பார்களேயானால், நிச்சயமாக அந்த ஆலோசனைகூடச் சொல்லாமல் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ளவில்லை. ஆகையால், இத்தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது சட்டமன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்ற இந்த நாளில், ‘தமிழ்நாடு’ என்று நான் சொன்னதும் வாழ்க என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

**சி.என் அண்ணாதுரை: தமிழ்நாடு!**
**உறுப்பினர்கள்: வாழ்க!**
**சி.என் அண்ணாதுரை: தமிழ்நாடு!**
**உறுப்பினர்கள் : வாழ்க!**
**சி.என்.அண்ணாதுரை: தமிழ்நாடு!**
**உறுப்பினர்கள்: வாழ்க!**

**- பேரறிஞர் அண்ணா**

**தன் தாய்க்குப் பெயரைத் தனயன் மீட்டளித்த நாளில் ஆற்றிய உரையின் சுருக்கம் இது 18.07.1967 அன்று ‘சென்னை மாகாணம்’ என்றிருந்த பெயருக்கு மாற்றாக ‘தமிழ்நாடு’ என்று பெயர் மாற்றத் தீர்மானத்தை நிறைவேற்றியது சட்டமன்றம்.**

**நன்றி**
**“மாபெரும் தமிழ்க் கனவு”**
**இந்து தமிழ் திசை**

## கிளைக் கழகச் செயலாளர் இல்லத்தில் உணவு!



**அறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தொடக்க நாள்களில் ஒரு சின்னஞ்சிறிய ஊர்ப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார். அந்த ஊருக்கு மின்சாரம் அடியெடுத்து வைக்காத காலம் அது, பெட்ரோமார்க்ஸ் விளக்கொளியில் பேசிமுடித்த அண்ணாவுக்கும் உடன் வந்தவர்களுக்கும் அந்த ஊரில் தகுந்த உணவு விடுதி இல்லாததால், கிளையின் கிளைச் செயலாளர் தன் வீட்டில் அவசர அவசரமாக உணவு சமைக்க கூறினார். பதற்றத்திலும், இருட்டிலும் வீட்டம்மையார் தவறிப்போய் வைத்த குழம்பில் மண்ணெண்ணெய்யைக் கலந்துவிட்டார்.**

**உணவு பரிமாறப்பட்டதும் உடன் வந்த நண்பர்கள் குழம்பில் உள்ள மண்ணெண்ணெய் நெடி தாங்காமல் முழுமையாகச் சாப்பிடாது எழுந்து விட்டனர். ஆனால் அண்ணா மட்டும் ஆரதீர எல்லாச் சாப்பாட்டையும் சாப்பிட்டு விட்டு செயலாளர் தோழரின் தோளில் தட்டி நன்றி கூறி புறப்பட்டார். வழியில் நண்பர்கள் அண்ணாவைக் கேட்டார்கள்: “எப்படியண்ணா, அந்த மண்ணெண்ணெய் கலந்த உண்வைக் கடைசி வரை சாப்பிட்டீர்கள்?” அண்ணா பதில் கூறினார். “இதோ பாருங்கள்! அந்தச் சாப்பாட்டில் மண்ணெண் ணெய் கலந்திருந்தது எனக்கும்தான் குமட்டலாக இருந்தது. ஆனால் அவர் எதிரில் அதை வெளிக்காட்டினால் அவர் மனம் உடைந்து விடும். எனவேதான் நான் முழுவதும் சாப்பிட்டேன்!” என்றார்.**